5. ஒழுங்குப் பிரச்சினை

உறுப்பினரின் கைது பற்றிய தகவல் அவைக்கு அளித்தல்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர். நேற்றைய தினம் இந்த மன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. முத்துவேல் அவர்கள் திண்டிவனத்தில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சபை நடக்கும்போது உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டால், பேரவைக்குத்தகவல் கொடுப்பது வழக்கம். ஆனால் தெரிவிக்கப் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆ.'.ப் ஆர்டரில் கொண்டுவர முடியாது. எனக்கு அதுபற்றிய தகவல் எதுவும் வரவில்லை. வந்திருந்தால் அவைக்கு அறிவித்திருப்பேன். நாளைக்கு அதைப்பற்றி விவாதிக்கலாம்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் உள்ள ஒரு உறுப்பினருடைய பிரச்னை. அவர் கைது செய்யப்பட்டிருப்பதை ஏன் காவல் துறை இதுவரையில் தங்களுக்கு அறிவிக்காமல் இருக்கிறது. காரணம் என்ன என்பதையாவது தாங்கள் அறிந்தாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கைது செய்யப்பட்டதை அறிவிப்பார்கள் அல்லது கைது செய்வதற்கு முன்னரே கூட அறிவிப்பார்கள். ஏன் கைது செய்தார்கள் என்பதற்கான காரணம் வந்துவிடும். வந்தவுடன் இந்தச் சபைக்கு அறிவிக்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, சபை இப்போது நடக்கிறது. தகவல் இதுவரையில் வரவில்லை.......

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, கைது செய்த பிறகு நம்முடைய அவை அங்கத்தினர்கள் கைது செய்யப்பட்டால் தகவல் கொடுப்பது என்பது போலீஸ்காரர்களுடைய சௌகரியத்திற்காகவோ, அல்லது அவர்களுடைய வசதிக்காகவோ அல்ல, இதை நான் அனுமதிக்க முடியாது என்று சொல்கிறேன். it is a general question எல்லோருடைய ரைட்ஸும் இதில் அடங்கி இருக்கிறது. யார் கைது செய்யப்பட்டாலும் the first thing must be a telegram to the Hon. Speaker ஆகவே நேற்றைக்குக் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று சொன்னால் இன்றைய வரைக்கும் தங்களுக்குத்தகவல் வரவில்லை என்று சொன்னால் " the officer who has arrested.) . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தகவல் வந்த பிறகுதான் அதைப்பற்றிச் சொல்ல முடியும்.

1981 மார்ச் 2]

(முற்பகல் 11-00)

திரு. துரை முருகன் : நேற்று மாலை கைது செய்யப்பட்டார், அது பத்திரிகையிலே வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டரிலே இதைக் கொண்டுவர முடியாது.

*திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டார் என்ற செய்தியை சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களிடத்திலே ஒழுங்கு பிரச்சினை மூல மாகத் தெரிவிக்கிறார்கள். அந்தச் செய்தி முறைப்படி தங்களுக்கு வந்ததற்குப் பின்னாலேதான் இந்த அவையிலே சொல்லப்படும் என்று—தங்களுக்கு இங்கே தரப்படுகிற தகவல் தவறான செய்தியாக இருக்கலாமோ என்ற ஐயப்பாட்டிலே—தாங்கள் அப்படிச் சொல்லக்கூடும். சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டால்அதைப்பற்றி அவைக்கு அறிவிக்கிற பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது, அதோடு கூட அப்படிப் பட்ட தகவல் தங்களுக்கு வரவில்லை என்று சொல்வதால் அதற் கான தாமதத்திற்கான காரணம் என்ன என்பதையும் சேர்த்து இந்த சபைக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பு இப்போது சபாநாய கருக்கு வந்து சேர்ந்திருக்கிறது. ஆகவே அதை இங்கே எழுப்பக் கூடாது என்று சொல்வது முறையல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுப்பக் கூடாது என்று நான் சொல்லவில்லை, அதை எழுப்புவதற்கு சில மரபுகள், முறைகள் இருக்கின்றன.

திரு. க. அன்பழகன்: தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக எழுப்பப்பட்டிருக்கிறது. கைது செய்தது பற்றிய விளக்கங்களைப்பெறுவதோடு, தாமத்திற்கான காரணங்களையும் தாங்கள் அறிவித்தாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காவல் துறையிடமிருந்து தகவல் வந்தபிறகு தெரிவிக்கிறேன். ஏன் தாமதமானது என்று கேட்கலாம் ?

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்)
திருத்தச் சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS